தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு

விழுப்புரம்/கடலூர், செப். 24: தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக மாநில பாஜக தலைவர் கே.அண்ணாமலை குற்றஞ்சாட்டினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளையொட்டி, விழுப்புரம் மாவட்டம், கூட்டேரிப்பட்டில் பாஜக நலத் திட்டப் பிரிவு சார்பில் 2 நாள் கண்காட்சியை சனிக்கிழமை தொடக்கிவைத்த பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

பிரதமர் மோடி கூறிய படி நகர்ப்புற நக்ஸல்களால் நாட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தடுக்கப்பட்டன. அதிமுக ஆட்சியின் போது கூடங்குளம் அணு உலை, எட்டு வழிச் சாலைத் திட்டங்களுக்கு எதிராகவும், தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகவும் சிலர் குரல் கொடுத்தனர். தற்போது திமுக ஆட்சியில் அவர்கள் மௌனமாக உள்ளனர்.

கே.அண்ணாமலை

விழுப்புரம் மாவட்டம், கூட்டேரிப்பட்டில் சனிக்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை.

நாட்டில் தாமிரத்தின் விலை இரு மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது. முன்னர் தாமிரத்தை ஏற்றுமதி செய்து வந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்ட பிறகு அதை இறக்குமதி செய்கிறோம்.

தமிழக முதல்வரையும், அரசையும் பாராட்டி ஆளுநர் கூறியது அவரது சொந்தக் கருத்து. ஆனால், திமுக அரசு மக்களிடம் ஊழல் அரசு என பெயர் வாங்கியுள்ளது. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு பெருமளவில் சீர்குலைந்துள்ளது.

வரலாறு குறித்து விவாதிக்கத் தயாரா? என அமைச்சர் பொன்முடி எனக்கு சவால் விடுத்துள்ளார். அவருடன் விவாதம் நடத்த எங்களது கட்சியின் மாநில துணைத் தலைவரை அனுப்பிவைக்கிறோம். என்னுடன் விவாதிக்க திமுக தலைவர் தயாரா? என்றார் அவர்.

பேட்டியின் போது கட்சியின் மாநில துணைத் தலைவர் ஏ.ஜி.சம்பத், மாவட்டத் தலைவர் ராஜேந்திரன், மாவட்ட பொறுப்பாளர் மீனாட்சி, முன்னாள் மாவட்டத் தலைவர் கலிவரதன் ஆகியோர் உடனிருந்தனர்.

விருத்தாசலம்: கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அருகே ஆலிச்சிக்குடி கிராம ஏரியை மத்திய கலால், ஜிஎஸ்டி துறையினர் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி வருகின்றனர். பிரதமரின் பிறந்த நாளையொட்டி பாஜக சார்பில் ஆலிச்சிக்குடி கிராம ஏரிக் கரைகளில் மரக்கன்றுகள் நடும் பணியை தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை சனிக்கிழமை தொடக்கி வைத்தார். விருத்தாசலம் ஒன்றியக் குழு உறுப்பினர் செந்தில்குமார் தலைமை வகித்தார். பின்னர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இஸ்லாமிய அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

கடலூர், செப். 24: பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா நிர்வாகிகளின் வீடுகளில் என்ஐஏ அதிகாரிகள் சோதனை நடத்தியதைக் கண்டித்தும், கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரியும் கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டையில் இஸ்லாமிய அமைப்பினர் சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து ஜமாஅத் இயக்கங்கள், அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்டச் செயலர் இக்பால் தலைமை வகித்தார். எஸ்டிபிஐ மாவட்டச் செயலர் முஜிபுர் ரஹ்மான், நாம் தமிழர் கட்சியின் விருத்தாசலம் தொகுதி இணைச் செயலர் முஹம்மது நபில், அனைத்து ஜமாஅத்தார்கள் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மக்கள் அதிகாரம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜூ, விசிக மாநில துணைச் செயலர் ராஜ்குமார், இந்திய குடியரசுக் கட்சியின் மாநில இணைப் பொதுச் செயலர் க.மங்காபிள்ளை, எஸ்டிபிஐ மாநில பேச்சாளர் ஷர்புதீன், மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட பொருளாளர் அசன் முஹம்மது, காங்கிரஸ் நகரத் தலைவர் வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலர் ரமேஷ், மக்கள் உரிமை பாதுகாப்பு மையம் மாவட்டச் செயலர் புஷ்பதேவன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் திரளானோர் கலந்துகொண்டு தேசிய புலனாய்வு முகமை, மத்திய பாஜக அரசைக் கண்டித்து முழக்கமிட்டனர்.

வாய்க்கால் புதுப்பிக்கும் பணி: எம்எல்ஏ ஆய்வு

புதுச்சேரி, செப்24: புதுச்சேரியில் கான்கிரீட் வாய்க்காலை புதுப்பிக்கும் பணியை எம்எல்ஏ ஜி.நேரு வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

புதுச்சேரி உருளையன்பேட்டை தொகுதி, காமராஜர் சாலையில் பொதுப் பணித் துறை கட்டடங்கள் மற்றும் சாலைகள் மத்திய பிரிவு மூலம், கோவிந்தசாலை, கல்வே பங்களா உள்ளிட்டப் பகுதிகளுக்குச் செல்லும் வழியில் வாய்க்கால்களை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணிகளை தொகுதி எம்எல்ஏ ஜி.நேரு அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டார். பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லும் இந்தப் பாதையை விரைவாக அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும், தரமாக கட்டமைப்புகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அதிகாரிகளிடம் எம்எல்ஏ அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது, பொதுப் பணித் துறை கட்டடங்கள், சாலைகள் மத்திய பிரிவு செயற்பொறியாளர் வல்லவன், உதவிப் பொறியாளர் பன்னீர்செல்வம் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள், மனிதநேய மக்கள் சேவை இயக்க பிரமுகர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சைவ சித்தாந்த பயிற்சி வகுப்பு தொடக்கம்

சிதம்பரம், செப். 24: தருமபுர ஆதீன சைவ சித்தாந்த மாலை நேரக் கல்லூரியின் சிதம்பரம் மையம் சார்பில் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி வகுப்பு தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

சிதம்பரம் குருஞானசம்பந்தர் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பயிற்சி மைய அமைப்பாளர் கே.சேதுசுப்பிரமணியன் தலைமை வகித்தார். புலவர் தி.பொன்னம்பலம் முன்னிலை வகித்துப் பேசினார் **(படம்).** ராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி நிர்வாகி ரத்தின.பாலசுப்பிரமணியன் பயிற்சி வகுப்பை தொடக்கிவைத்து பேசினார். சைவ சித்தாந்தம் குறித்து பேராசிரியர் மு.சிவச்சந்திரன் விளக்க உரையாற்றினார். சிதம்பரம் நகரப் பிரமுகர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பல்கலை.யில் தேசியப் பயிலரங்கு



சிதம்பரம், செப். 24: சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக இயந்திரப் பொறியியல் துறை சார்பில் 'கழிவுகளிலிருந்து மதிப்புகள், வாய்ப்புகள், சவால்கள்' என்ற தலைப்பிலான இரண்டு நாள் தேசியப் பயிலரங்கம் அண்மையில் நடைபெற்றது **(படம்).**

நிகழ்ச்சியை பல்கலைக்கழக கல்வி சார் ஆராய்ச்சி இயக்குநர் ஏ.ரகுபதி தொடக்கி வைத்தார். சேலம் ஆல்பா பாலிமர்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் பி.எல்.ஏகப்பன் தலைமை வகித்தார். இயந்திரவியல் துறைத் தலைவர் எஸ்.வைத்தியநாதன் வரவேற்றார். பயிலரங்கின் கருப்பொருளை பேராசிரியர் எஸ்.சரவணன் எடுத்துரைத்தார். பல்வேறு கல்லூரிகளில் இருந்து 60 மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். முனைவர் டி.கார்த்திகேயன் நன்றி கூறினார்.

பள்ளி மாணவிகளுக்கு பாராட்டு

வந்தவாசி, செப். 24: விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வந்தவாசி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு அந்தப் பள்ளியில் வெள்ளிக்கிழமை பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

செய்யாறு இந்தோ அமெரிக்கன் பள்ளியில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டியில் 19 வயதுக்கு உள்பட்டோர் பிரிவில் இந்தப் பள்ளி மாணவி க.ஜீவிதா முதலிடம் பெற்று மாநில போட்டிக்கு தகுதி பெற்றார்.

திருவண்ணாமலை முருகையா மேல்நிலைப் பள்ளியில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான வளையப்பந்து போட்டியில் 17 வயதுக்கு உள்பட்டோர் பிரிவில் இந்தப் பள்ளி மாணவி எஸ்.மனோஸ்ரீ இரண்டாமிடமும், 19 வயதுக்கு உள்பட்டோர் பிரிவில் இப்பள்ளி மாணவி பி.விமலா இரண்டாமிடமும் பெற்றனர்.

மேலும் கேரம் போட்டியில் 19 வயதுக்கு உள்பட்டோர் பிரிவில் இப்பள்ளி மாணவிகள் எஸ்.ஜாஸ்மின், எல்.ஷோபனா ஆகியோர் இரண்டாமிடம் பெற்றனர். இதையடுத்து வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பள்ளித் தலைமை ஆசிரியை பி.பத்மாவதி மற்றும் ஆசிரியைகள் பாராட்டு தெரிவித்தனர்.

தொழிலாளி கொலை வழக்கு: மனைவி கைது

திருவண்ணாமலை, செப்.24: தண்டராம்பட்டு அருகே தொழிலாளி கொலை வழக்கில் ஏற்கெனவே இரு மகன்கள் கைது செய்யப்பட்ட நிலையில், அந்தத் தொழிலாளியின் மனைவியும் கைது செய்யப்பட்டார்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தானிப்பாடியை அடுத்த குபேரப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்தவர் கூலித் தொழிலாளி சகாதேவன் (57). இவரது மனைவி அன்னக்கிளி (47). தம்பதிக்கு 2 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர்.

இளைய மகன் சக்திவேலுக்கு 2019-ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. திருமணமான ஒரே மாதத்தில் அவரது மனைவி பிரிந்து சென்றுவிட்டார்.

எனவே, தனக்கு 2-ஆவது திருமணம் செய்து வையுங்கள் என்று பெற்றோரிடம் சக்திவேல் கேட்டு வந்தாராம். வியாழக்கிழமை (செப்.22) மாலை வழக்கம்போல தனக்கு திருமணம் செய்து வைப்பதுடன், உன் பெயரில் உள்ள சொத்தை எனது பெயருக்கு எழுதிக் கொடு என்று சக்திவேல் தனது தந்தை சகாதேவனிடம் கேட்டாராம். இதற்கு, 3 ஆண்டுகளுக்குப் பிறகு தான் உனக்குத் திருமணம் செய்ய முடியும் என்று சகாதேவன் கூறினாராம்.

இதையடுத்து மகன்கள் மணிகண்டன், சக்திவேல், தந்தை சகாதேவன் ஆகியோருக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரமடைந்த மகன்கள் தந்தை சகாதேவனை மண்வெட்டி, அரிவாளால் வெட்டிக் கொன்றனராம். இதுகுறித்து தானிப்பாடி போலீஸார் வழக்குப் பதிந்து மகன்கள் மணிகண்டன் (28), சக்திவேல் (25) ஆகியோரை கைது செய்தனர்.

மனைவி கைது: இந்தக் கொலையில் சகாதேவனின் மனைவி அன்னக்கிளிக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அன்னக்கிளியை (47) வெள்ளிக்கிழமை மாலை போலீஸார் கைது செய்தனர். சகாதேவனுக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்ததும், இதனால் குடும்பத்தை சரிவர கவனிக்காததால் ஆத்திரமடைந்து மனைவி, மகன்கள் சேர்ந்து இந்தக் கொலையை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து அன்னக்கிளியை போலீஸார் நீதிபன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

ஊராட்சிச் செயலர் பணியிட மாற்றம்: உறவினர்கள் சாலை மறியல்

செஞ்சி, செப்24: விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே ஊராட்சிச் செயலர் பணியிட மாற்றம் செய்யப்பட்டதைக் கண்டித்து, அவரது உறவினர்கள் சனிக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால், அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

செஞ்சி அருகே ஊராட்சிச் செயலர் பணியிட மாற்றம் செய்யப்பட்டதை கண்டித்து, சாலை மறியலில் ஈடுபட்ட அவரது உறவினர்கள்.

செஞ்சி ஒன்றியம், சிறுநாம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சுபர்ணா. இவர், அதே கிராமத்தில் ஊராட்சிச் செயலராகப் பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில், சுபர்ணாவை பாக்கம் ஊராட்சிக்கும், பாக்கம் ஊராட்சியில் பணியாற்றி வரும் ரவிசங்கரை சிறுநாம்பூண்டி ஊராட்சிக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர் கடந்த 19-ஆம் தேதி பணியிட மாற்றம் செய்தார்.

ஆனால், சுபர்ணா பாக்கம் கிராமத்துக்குச் செல்லாமல் இங்கேயே தங்கி ஊரக வேலைத் திட்டப் பணிகளை மேற்பார்வை செய்து வருகிறார். பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஊராட்சிச் செயலர் ரவிசங்கர், சிறுநாம்பூண்டிக்கு வந்தபோது, அவரை ஊருக்குள் வரவிடாமலும், பணி செய்யவிடாமலும் சுபர்ணாவின் உறவினர்கள் தடுத்து நிறுத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், சுபர்ணா சொந்த ஊரில்தான் பணி செய்ய வேண்டும், அவர் பாக்கம் கிராமத்துக்கு செல்ல மாட்டார் எனக் கூறி, அவரது உறவினர்கள் அப்பம்பட்டில் உள்ள விழுப்புரம் - செஞ்சி சாலையில் கவரை என்ற பகுதியில் சனிக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்து வந்த அனந்தபுரம் போலீஸார் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் சென்று ஊராட்சிச் செயலர் சுபர்ணாவை பணியிட மாற்றம் செய்யக் கூடாது என்பதற்கான காரணத்தை தெரிவித்து, மனு அளித்து தீர்வு காணுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தினர். இதைத் தொடர்ந்து, மறியலில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். மறியலால் விழுப்புரம் - செஞ்சி சாலையில் சுமார் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

புதுவையில் 7 பேருக்கு பன்றிக் காய்ச்சல் உறுதி

புதுச்சேரி, செப்.24: புதுவையில் இன்ஃபுளுயன்சா காய்ச்சலால் சனிக்கிழமை 10 பேர் பாதிக்கப்பட்ட நிலையில், இவர்களில் 7 பேருக்கு பன்றிக் காய்ச்சல் உறுதி செய்யப்பட்டது.

புதுவையில் அண்மைக்காலமாக வைரஸ் காய்ச்சல் (ப்ளூ) வேகமாகப் பரவி வருகிறது. இந்தக் காய்ச்சலால் குழந்தைகள், சிறார்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால், அரசு மருத்துவமனைகளில் சிறப்பு காய்ச்சல் மையங்கள் தொடங்கி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வரும் குழந்தைகள், பெரியவர்களின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மருத்துவப் பரிசோதனைக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், புதுச்சேரி, காரைக்காலில் சனிக்கிழமை நிலவரப்படி, ஒரே நாளில் 529 குழந்தைகள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக வந்தனர்.

இதுகுறித்து மாநில சுகாதாரத் துறை இயக்குநர் ஸ்ரீராமுலு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி ராஜீவ் காந்தி அரசுப் பெண்கள், குழந்தைகள் மருத்துவமனையில் 430, அரசு மருத்துவக் கல்லூரியில் 53, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் 46 பேர் என மொத்தம் 529 குழந்தைகள் சனிக்கிழமை காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, வெளிப்புற சிகிச்சைப் பிரிவுக்கு வந்து சிகிச்சை பெற்றனர்.

இவர்களில் ராஜீவ் காந்தி குழந்தைகள் மருத்துவமனையில் 43, அரசு மருத்துவக் கல்லூரியில் 7, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் 6 பேர் என மொத்தம் 56 குழந்தைகள் அதிக காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது புதுச்சேரி அரசு குழந்தைகள் மருத்துவமனையில் 142, அரசு மருத்துவக் கல்லூரியில் 42, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் 17 பேர் என மொத்தம் 201 குழந்தைகள் உள்நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பெரியவர்கள் என மொத்தம் 110 பேரின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. இதில் புதிதாக 8 பேருக்கு இன்ஃபுளுயன்சா வைரஸ் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது.

ஏற்கெனவே இன்ஃபுளுயன்சா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 2 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், தற்போது இந்த நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 10-ஆக உயர்ந்தது.

இவர்களில் ஜிப்மரில் 2 பேரும், புதுச்சேரி அரசு மருத்துவமனையில் ஒருவரும், காரைக்கால் அரசு மருத்துவமனையில் ஒருவரும், 2 தனியார் மருத்துவமனைகளில் 6 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனிடையே, இவர்களில் 7 பேருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்பிருப்பதும் உறுதி செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றார் அவர்.

திருவண்ணாமலையில் புத்தகத் திருவிழா

திருவண்ணாமலை, செப். 24: திருவண்ணாமலையில் ரோட்டரி சங்கம் சார்பில் நடைபெறும் புத்தகத் திருவிழா சனிக்கிழமை தொடங்கியது.

திருவண்ணாமலை ரோட்டரி கிளப் ஆஃப் மூன்சிட்டி, திருவண்ணாமலை ரோட்டரி கிளப் ஆஃப் லைட் சிட்டி, பொன்முடி இல்லம் தோறும் நூலகம், சென்னை அண்ணாநகர் சைக்கிள்ஸ், கவுரா இலக்கிய மன்றம் இணைந்து புத்தகத் திருவிழாவை நடத்துகிறது.

இதன் தொடக்க விழா திருவண்ணாமலை, காந்தி நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு, ரோட்டரி சங்கத் தலைவர் எஸ்.டி.தனக்கோட்டி தலைமை வகித்தார். திருவண்ணாமலை வெற்றித் தமிழர் பேரவையின் தலைவர் ப.கார்த்திக்வேல் மாறன், ரோட்டரி தலைமை வழிகாட்டி எஸ்.கிருஷ்ணகுமார், திருவண்ணாமலை வியாபாரிகள் சங்கத் தலைவர் எம்.மண்ணுலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திமுக மாநில மருத்துவரணி துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு புத்தகத் திருவிழாவை தொடக்கிவைத்தனர்.

விழாவில், நல் நூலகர் த.வெங்கடேசன், ரோட்டரி சங்க நிர்வாகிகள் பி.அருண்மொழிவர்மன், கே.சுப்புலட்சுமி, ஆர்.எஸ்.சுரேஷ், பி.செல்வராசன், கவுரா ஜெய்கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த புத்தகத் திருவிழா அக்டோபர் 3-ம் தேதி வரை தினமும் காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும். பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டுப் போட்டிகள் தினசரி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் என்று ரோட்டரி சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

பெண்ணின் படத்தை சமூக வலைதளத்தில் பதிவேற்றம் செய்தவர் கைது

நெய்வேலி, செப். 24: பெண்ணின் படத்தை சமூக வலைதளத்தில் பதிவேற்றம் செய்த இளைஞரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மேல்பாதி கிராமத்தைச் சேர்ந்த கனகராஜ் மகன் முத்தமிழன் (25). இவர், 22 வயது பெண்ணை காதலித்து வந்தாராம். ஆனால், முத்தமிழனின் நடத்தை சரியில்லாததால் அவருடன் பழகுவதை அந்தப் பெண் நிறுத்திவிட்டாராம்.

இதனால் ஆத்திரமடைந்த முத்தமிழன், அந்தப் பெண்ணுடன் தனியாக இருந்தபோது எடுத்த படத்தை சமூக வலைதளத்தில் பதிவேற்றம் செய்தார்.

இதுகுறித்து அந்தப் பெண் அளித்த புகாரின் பேரில் பண்ருட்டி அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து முத்தமிழனை கைது செய்தனர்.

ஜெயராம் ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்
பூரணங்குப்பம், அரியாங்குப்பம்,
புதுச்சேரி மாவட்டம், புதுச்சேரி.

பொது அறிவிப்பு

இதனால் பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் இந்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின் கோப்பு எண். F.No- 11-28/2022-IA-.III தேதியிட்டது: 15.09.2022 வாயிலாக ஜெயராம் ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s JAYARAM HOTELS PVT LTD) அவர்களுக்கு கீழ்கண்ட தொகுதி. எண்: 51/2 பூரணங்குப்பம் கிராமம், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து, புதுச்சேரி மாவட்டத்தில் அமைந்துள்ள இடத்தில் முன்மொழியப்பட்ட ஹோட்டல், ரிசார்ட்ஸ் & பொழுதுபோக்கு நடவடிக்கைகளின் சுற்றுச்சூழல் இசைவுச்சான்று வழங்கியுள்ளது. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்- MoEF&CC வழங்கிய சுற்றுச்சூழல் அனுமதி, மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் MoEFCC இணையதளத்தில் https://parivesh.nic.in/ கிடைக்கிறது.

மேலான் இயக்குனர்

வி விளம்பரம்

JOB OPPORTUNITIES

SITUATION VACANT

WANTED RESIDENT DOCTORS
DOCTORS WITH EXPERIENCE IN EMG/CRITICAL CARE MEDICINE
QUARTERS AVAILABLE
24/7 NABH ACRED multi specialty hospital
GIVING 24/7 CRITICAL CARE
Industry Standard Salary
Karthic Medical Centre, Idappadi, Salem Dt, whatsapp/call @ 93634 82614

CHANGE OF NAME

I, SAIRAAM, S/o.Annadurai, born on 16.09.2004, residing at Plot No.48 to 55, Sai Villa, Arokiyammal Garden, Thirumudi Sedhuraman Nagar, Puducherry - 605011, solemnly declare that, I have changed my name as SAIRAAM ANNADURAI NACHIYAR (SAIRAAM A N) and hereafter I shall be known and called as SAIRAAM ANNADURAI NACHIYAR (SAIRAAM A N) only.
- SAIRAAM

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை!
புதுமை!
இனிமை!

TARGET STUDY CENTRE
(வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்)
விழுப்புரம். செல் : 7639000355
TNPSC - 2023
Gr.II, IV, VAO
ஒரே கட்டணம் ஓராண்டு பயிற்சி
STATISTICS
(ASSISTANT STATISTICAL INVESTIGATOR)
PAPER I & II
STATISTICS (TAMIL / ENGLISH)
ADMISSION DEMO CLASS
25.09.2022 Sunday 10.30 AM
DAILY/WEEKEND CLASS & TEST BATCH
அட்மிஷன் நடைபெறுகிறது
www.targettnpsc.com
323A, காமராஜர் சாலை, விழுப்புரம்
(ஸ்ரீ கணேஷ் ஜுவல்லரி மாடியில்)
76390 00355
76390 00366